## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 257/2015

நாள்: 12.03.2026

பெயர்: ராதாகிருஷ்ணன் த/பெ: துரையப்பன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>6 முதல் 10 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>

1. எனது சர்வே எண் 67/27 என்றால் சரிதான். அதற்கு கிழக்கே பிள்ளயைார் உள்ளது. அந்த கோவில் பெயர் வரசக்தி விநாயகர் கோவில் என்றால் சரிதான். அது ஊர் பொதுக் கோவில் என்றால் சரிதான். சுமார் அந்த கோவில் 15 வருடங்களாக உள்ளது. கோவிலுக்கு வடபுறம் கீழ் மேல் ரோடு போகிறது என்றால் சரிதான். கோவிலுக்கு கிழக்கு புறம் காலியாக உள்ளதா என்றால் உள்ளது. மேற்கு புறம் காலியாக இல்லை வீடுகள் உள்ளது. கோவிலுக்கு தெற்கு வடக்காக ஒரு ரோடு செல்கிறதா என்றால் செல்கிறது. கோவிலை தாண்டி தென் புறம் 9ஆம் பிரதிவாதியின் வீடு உள்ளதா என்றால் உள்ளது. கலியமூர்த்தியின் வீட்டிற்கு தென்புறம் பாலசுப்ரமணியனின் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு தென்புறம் ரவி வீடு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு தென்புறம் சிவபுன்னியம் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கே ஒரு வீடு தள்ளி நாகப்பன் வீடு உள்ளது. அவர் இவ்வழக்கின் 8 ஆம் பிரதிவாதி. அதற்கு தென்புறம் ராஜேந்திரன் வீடு உள்ளது அவர் 7ஆம் பிரதிவாதி. அதற்கு அடுத்து அருணாச்சலம் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு தெற்கே எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா உயிரோடு இருக்கும் காலத்திலே பிள்ளையார் கோவில் இருந்தது. எனது அப்பா உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அப்போது பிரச்சனை இல்லை அதனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஊர் நாட்டார்களும் ஊர்காரர்களும் சேர்ந்து கோவிலுக்கு கும்பாபிசேகம் செய்வார்கள். 7ஆம் பிரதிவாதி ராஜேந்திரன் கோவில் கும்பாபிசேகத்தின் போது நாட்டாராக

இருந்தாரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

2. என்னுடைய மூதாதேயரும் 6 முதல் 10 ஆம் பிரதிவாதியின் மூதாதேயர்கள் அந்த கோவிலை கட்டி வழிபட்டார்களா என்றால் ஊரே சேர்ந்து வைத்திருந்தது. 7ஆம் பிரதிவாதி தலைமை நாட்டாராக இருந்தாரா என்றால் இல்லை. அந்த கோவிலில் விநாயகர் சதுர்த்தி திருவிழா விமர்சயாக கொண்டாடப்பட்டது என்றால் சரிதான். அப்போது பிள்ளையார் மூன்று முறை கோவிலை சுற்றி வலம் வருவார் என்றால் இல்லை. கோவிலுக்கு மேற்கே தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். காம்பௌன்டிற்கு பின்னே உள்ளது. 01.09.2004 ல் பிள்ளயைார் கோவில் கும்பாபிசேகம் நடந்ததா என்றால் நடந்தது வருடம் ஞாபகத்தில் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆன FMB ல் சர்வே எண் 67/27 ல் வீடு இல்லை என்று சொன்னால் அப்போது இல்லை தற்போது உள்ளது. சர்வே எண். 67/1 கோவில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 67/27 ல் 1955 ஆம் வருடத்தில் வீட்டோடு சேர்த்து கிரயம் வாங்கினோம். அதை துரையப்பன் வாங்கினார். 1955 வருடத்திற்கு பின்பு வீடு இல்லை என்றால் சரியல்ல. வீடு இருந்தது. அனைவருக்கும் பட்டா வழங்கம் பொழுது அங்கு வீடு இல்லை. துரையப்பன் எனது தகப்பனார் ஆவார். அவருக்கு வாரிசுகள் என்னையும் சேர்த்து 4 நபர்கள். 2 பெண்கள் 2 ஆண்கள். எங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டோமா என்றால் வாய்மொழியாக பிரித்துக்கொண்டோம். எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. இந்த சொத்து என்னுடையது என்று காண்பிப்பபதற்கு ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டோம். பாகம் பிரித்துக்கொடுத்ததற்கு பின்பு அந்த வீட்டில் நான் தான் குடியிருந்தேன். அந்த வீட்டில் நான் குடியிருந்தேன் என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆதரவு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது நான் குடியிருக்கும் வீட்டிற்கு சுமார் 10 வருடத்திற்கு முன்பு குடிவந்தேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ல் எனது பெயர் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2ல் உள்ள ரசீதுகள் 08.12.1980 மற்றும் 13.10.1982 உள்ள ரசீதுகள் என்றால் சரிதான். அந்த 2 ரசீதுகளில் என்ன வீடு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த ரசீதுகளில் சர்வே எண் குறிப்பிபடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ல் என் தந்தை பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தில் சர்வே எண் 67/1 என்று தான் உள்ளது என்றால் சரிதான். 1955 ஆம் வருடம் வாங்கிய கிரயத்தால் அப்போது சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்வில்லை. பின்னர் எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்பது தெரியாது. உட்பிரிவு செய்யப்ட்டதற்கு முன்பு எங்களுக்கு 67/27 ஒதுக்கப்பட்டது. அதற்கு உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என்னிடம காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ல் சர்வே எண் 67/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் அளவு கீழ்மேல் 36 காலடிக்கு தென்வடல் 56 காலடி என்று உள்ளது என்றால் சரிதான். எனது அப்பா துரையப்பன் பெயரில் பட்டா இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது அப்பா இறப்பிற்கு பின்னர் வாரிசுகள் என்ற முறையில் தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் கூட்டுபட்டா ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் இல்லை. ஊரில் உள்ள குடியிருப்பு சொத்துக்கள் அனைத்தும் நத்தம் வகைப்பாட்டை சேர்நதது என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் வருவாய் ஆவணங்களான நத்தம் பட்டா நத்தம் அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.3 ல் சர்வே எண் 67/1 ல் 5 செண்ட் கிரயம் பெற்று கூரைவீட்டுடன் கூடிய இடத்தில் 30 வருடங்களாக எனது அப்பா குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன். எனது அப்பா இறந்ததற்கு பிறகு தெற்கு புறத்தில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ன் படி 25.04.2001 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். அப்பா இறந்து 2 வருடங்களுக்கு பின்பே நான் மேலே குறிப்பிட்ட தென்புறத்தில் வீடு கட்டி உள்ளேன் என்றால் சரிதான். 20.07.2015 ஆம் ஆண்டு வீட்டு வரி ரசீது கேட்டு தா.பழூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மனு அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் தரவில்லை.

12.01.2015 ஆம் வருடம் மாவட்ட ஆட்சியரிடம் வருவாய் துறை ஆவணங்களை திருத்தும் படி மனு அளித்துள்ளேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.10 என்றால் சரிதான். 29.06.2015 ஆம் வருடம் நத்தம் பட்டாவை மாற்ற சொல்லி மாவட்ட ஆட்சியருக்கு மனு அளித்தேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.5 என்றால் சரிதான். அதிலும் நான் சர்வே எண் 67/1 என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவிற்கு பின்னிட்டு எனது பெயரிக்கு மாவட்ட ஆட்சியர் பட்டா எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். 2001 ஆம் வருடம் எனது அப்பா இறந்ததற்கு பிறகு 2002 ஆம் வருடம் முதல் 2015 வருடம் வரை பட்டா மாறுதலுக்காக மனு அளித்தோமா என்றால் இல்லை. பிரச்சனைக்கு பிறகு தான் மனு அளித்தோம். வா.சா.ஆ.1 ன் படி எனது அப்பாவிற்கு உண்டான சொத்தை காண்பிப்பதற்கு வில்லங்கம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 14.07.1947 தேதியிட்ட வா.சா.ஆ.9 க்கு முன்பு இருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கு வில்லங்க சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் தொடர்ச்சியாக உள்ளது என்பதை காண்பிப்பதற்கு எந்த வித வருவாய் ஆவணங்களோ வீட்டு வரி ரசீதோ மின் கட்டண ரசீதோ தண்ணீர் வரி ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு சொத்தாக சர்வே எண் 67/27 ஐ தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். அதன் நான்கெல்லையில் காலி நிலத்திற்கு மேல் தெற்கு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/-ராதாகிருஷ்ணன்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/-S.தனலெட்சுமி
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்